சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **123/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | முருகேஷ் |
| தந்தை பெயர் | : | கோவிந்தராஜ் |
| கிராமம் | : | அண்ணாநகர், ஜீவா தெரு, திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | கொத்தனார் |
| வயது | : | 37 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

## முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 குமாரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1 குமாரின் இரண்டாவது மகளான நந்துதாசினி தற்கொலை செய்து கொண்டது

தொடர்பாக போன் மூலம் தகவல் தெரிந்து கொண்டேன். அவரது உடலை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்தபோது நானும் மருத்துவமனையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் பிரேத பரிசோதனை அறிக்கையில் நான்காவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உறவினர் என்ற முறையில் பிரேத பரிசோதனை முடித்து உடலை பெற்று வந்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

அ.சா.1 குமார் எனது ஊரை சேர்ந்தவர் என்றாலும், எனது உறவுக்காரர் என்றாலும் சரிதான். நான் பிரேதத்தை பார்த்ததாக சொல்லும் நேரம், இடமும் தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் அ.சா.ஆ.7 ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்திலேயே கிடையாது என்றாலும், நான் அ.சா.ஆ.7 ஆவணத்தில் கையெழுத்து செய்யவுமில்லை என்று சொன்னாலும் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்ற காரணத்திற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது இந்நீதிமன்றத்திற்கு என்னை செலவு செய்து அழைத்து வந்தது அ.சா.1 குமார் தான் என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.12 18:28:11 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.